DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 261/2024

Prosecution PW 1

Deposition of Witness for Defence

Court

Name : ஜானகி

Husband's Name : செல்வராஜ்

Village :

Taluk :

District :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 17.11.2025

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் புதூர், ஆண்டாங்கோவில் தெருவில் குடியிருந்து டெக்சில் வேலை செய்து வருகிறேன். கடந்த 06.11.2023 ம் தேதி காலை சுமார் 07.45 மணியளவில் தக்காளி வாங்குவதற்காக அருகிலுள்ள ராஜேஷ்வரி மளிகை கடைக்கு சென்றேன். தக்காளி வாங்கிக் கொண்டு பணம் கொடுப்பதற்காக நின்றுகொண்டிருந்தபோது, இரண்டு நபர்கள் இருசக்கர வாகனத்தில் வந்தனர்.

இருசக்கர வாகனத்தில் வந்த இரண்டு நபர்களில் ஒரு நபர் கடைக்காரரிடம் டம்ளர் கேட்டார். அதற்க கடைக்காரர் திரும்பி டம்ளர் எடுக்கும் சமயத்தில் எனது அருகில் நின்ற நபர் என்னுடைய தாலி செயினை பறித்தார். நான் பிடித்துக்கொள்ளவே தாலி செயின் பாதியை அறுத்துக்கொண்டு இருசக்கர வாகனத்தில் இருந்த நபருடன் அந்த நபர் ஏறிச் சென்றுவிட்டார். எனது அருகில் நின்று நகையை பறித்த நபர் ஆஜர் எதிரிதான். பின்னர், சம்பவம் குறித்து எனது கணவரிடம் கூறவே கரூர் நகர காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். நான் அணிந்திருந்த தாலி செயினின் எடை 5 பவுன் ஆகும். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையது. **புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தனர். பின்னர், சுமார் 15 நாட்கள் கழித்து போலிசார் நகை கிடைத்துவிட்டதாக சொன்னதன்பேரில் காவல் நிலையம் சென்று நகையை அடையாளம் காட்டினேன். என்னிடம் காட்டப்படும் போட்டோவிலுள்ள அறுந்த நிலையில் காணப்படும் தாலி கொடி செயின் என்னுடையது. **போட்டோவிலுள்ள அறுந்த நிலையில் காணப்படும் தாலி கொடி செயினின் எடை சுமார் 2 1/2 பவுன் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

**குறுக்கு விசாரணை செய்ய எதிரி தரப்பில் கால அவகாசம் கோரியதால் உச்ச நீதிமன்ற வழிகாட்டுதலின்படி விசாரணை முடிக்கப்பட்டது.**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./–எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 261/2024

Prosecution PW 2

Deposition of Witness for Defence

Court

| | | |
|---|---|---|
| Name | : | செல்வராஜ் |
| Father's Name | : | சண்முகம் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 17.11.2025

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் ஆண்டாங்கோவில் கீழ்பாகத்தில் குடியிருந்து நான் தற்சமயம் உடல்நிலை சரியில்லாததால் வீட்டில் இருந்து வருகிறேன். அ.சா.1 எனது மனைவி ஆவார். கடந்த 06.11.2023 ம் தேதி காலை சுமார் 07.45 மணியளவில் தக்காளி வாங்குவதற்காக அருகிலுள்ள மளிகை கடைக்கு சென்றேன். தக்காளி வாங்கிக் கொண்டு பணம் கொடுப்பதற்காக நின்றுகொண்டிருந்ததாகவும்,

இரண்டு நபர்கள் இருசக்கர வாகனத்தில் வந்ததாகவும், இருசக்கர வாகனத்தில் வந்த இரண்டு நபர்களில் ஒரு நபர் கடைக்காரரிடம் டம்ளர் கேட்டதாகவும், அதற்க கடைக்காரர் திரும்பி டம்ளர் எடுக்கும் சமயத்தில் எனது மனைவி அருகில் நின்ற நபர் எனது மனைவியின் தாலி செயினை பறித்ததாகவும், எனது மனைவி பிடித்துக்கொள்ளவே தாலி செயின் பாதியை அறுத்துக்கொண்டு இருசக்கர வாகனத்தில் இருந்த நபருடன் அந்த நபர் ஏறிச் சென்றுவிட்டதாகவும், பின்னர், சம்பவம் குறித்து எனது மனைவி என்னிடம் கூறவே கரூர் நகர காவல் நிலையம் சென்று எனது மனைவி புகார் கொடுத்தார். பின்னர் நகை கிடைத்துவிட்டதாகவும், போலிசார் சொன்னதன்பேரில் காவல் நிலையம் சென்று நகையை அடையாளம் காட்டினோம். பின்னர் நகையை நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து பெற்றுக்கொண்டோம். என்னிடம் போட்டோவிலுள்ள அறுந்த நிலையிலான பாதி தாலி கொடி செயின் என்னுடைய மனைவியுடையது. எனது மனைவி அணிந்திருந்த தாலி கொடி செயினின் எடை 5 பவுன் ஆகும். மீதி பாதி செயின் எடைபோட்டு பார்த்ததில் 2 1/2 பவுன் இருந்தது. போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

**குறுக்கு விசாரணை செய்ய எதிரி தரப்பில் கால அவகாசம் கோரியதால் உச்ச நீதிமன்ற வழிகாட்டுதலின்படி விசாரணை முடிக்கப்பட்டது.**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./–எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 261/2024

Prosecution PW 3

Deposition of Witness for Defence

Court

Name : மகாராஜா

Father's Name : சிவனாண்டி

Village :

Taluk :

District :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 17.11.2025

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் ஆண்டாங்கோவில் கீழ்பாகம், வடிவேல் நகரில் குடியிருந்து நான் ராஜேஸ்வரி என்ற பெயரில் மளிகைக் கடை வைத்துள்ளேன். மளிகை கடை உடன் காய்கறியும் விற்பனை செய்து வருகிறேன். அ.சா.1 ஐ எனக்கு தெரியும்., கடந்த 06.11.2023 ம் தேதி காலை சுமார் 07.45 மணியளவில் தக்காளி வாங்குவதற்காக வந்தார். தக்காளி வாங்கிக் கொண்டு பணம் கொடுப்பதற்காக

நின்றுகொண்டிருந்தார். அப்போது இரண்டு நபர்கள் இருசக்கர வாகனத்தில் வந்ததனர். இருசக்கர வாகனத்தில் வந்த இரண்டு நபர்களில் ஒரு நபர் வந்து என்னிடம் டம்ளர் கேட்டார். அந்த நபர் சொட்டர் குல்லா அணிந்திருந்தார். சம்பவம் நடந்து இரண்டு வருடங்கள் ஆகிவிட்டதால் தற்சமயம் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள நபர்தான் என்று அடையாளம் சொல்ல இயலவில்லை. அந்த நபர் அவசரமாக டம்ளர் கேட்டதால் நான் திரும்பியபோது, அ.சா.1 ஜானகி அருகில் இருந்த நபர் செயினை பிடித்துக் கொண்டு செயினை பறிப்பதாக சத்தம் போட்டார். நான் உடனடியாக கடையைவிட்டு இறங்கி வரும்போது, அந்த நபர்களை பிடிக்க சத்தம்போட்டபோது, எனது கடைக்கு ஒரு நபர் இருசக்கர வாகனத்தில் வந்தார். அவரும் அந்த நபர்களை பிடிக்க முயற்சி செய்தபோது, அவரையும் தள்ளிவிட்டு இருசக்கர வாகனத்தில் ஏறி சென்றுவிட்டனர். சம்பவம் குறித்து அ.சா.1 கொடுத்த புகாரின்பேரில் போலிசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)

**குறுக்கு விசாரணை செய்ய எதிரி தரப்பில் கால அவகாசம் கோரியதால் உச்ச நீதிமன்ற வழிகாட்டுதலின்படி விசாரணை முடிக்கப்பட்டது.**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./–எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**